**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் 02 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 363,041 தொகைக்காக கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன், மேலும், 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,462,633 தொகை அதிகரித்து ஒதுக்கப்பட்டிருந்தது. | சகல கடன் கொடுத்தோருக்காகவும் ஒதுக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது குறைவாகவோ அல்லது அதிகரித்தோ நிதி உள்ளடக்கப்படாதிருந்தமையால் பந்தியை இறுதி அறிக்கையில் நீக்குமாறு வேண்டுகின்றோம். |

#### (ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 564,799 தொகையான 02 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் அவற்றிக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 354,450 | நிதிக் கூற்றுக்கள் மற்றும் உரிய பட்டோலைகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட | நிதிக் கூற்றுக்களுக்கும் உரிய பட்டோலைகளுக்கும் வேறுபாடுகள் இல்லாமையினால் பந்தியை இறுதி அறிக்கையில் நீக்குமாறு வேண்டுகின்றோம். |

| | | |
|---|---|---|
| தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேண்டும். | |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இருப்பு பதிவேடு மற்றும் மெய்மெய்யாய்வு அறிக்கை இன்மையினால் ரூபா 6,628,417 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கும் போது அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதும் உரிய தேவைகளின் அடிப்படையில் பதிவேடுகள் அவ்வப் போது சமர்ப்பிப்பதற்கு வேண்டி ஏற்பட்டிருந்ததினால், அறிக்கை சமர்ப்பித்தலில் வசதியீனம் ஏற்பட்டமையினால் இந்த பந்தியை அகற்றுமாறு தயவுசெய்து கேட்டுக் கொள்கிறோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவு | | சபைக்குச் சொந்தமான சகல வீதிகளின் அளவும் நிர்மாணிக்கப்பட்ட, நிர்மாணத்திற்கு உத்தோசிக்கப்பட்டதாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சகல வீதிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் தனித்தனியான இனங்காணப்படல் வேண்டும். | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2017 நவம்பர் 17 ஆம் திகதி இலங்கை சனறாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி. | 47,100 | களுத்துறை நகர சபை அதிகார பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டு ள்ள 15 அறிவித்தல் பதாதைகளில் ஆண்டிற்குரிய கட்டணம் அறவிடப்பட்டிருக்கவி ல்லை. | வர்த்தமானிக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம் . |
| (இ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி | | சரியாக மெய்மெய்யாய்வு மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | வர்த்தமானிக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம் . |
| (ஈ) | 2014 பெப்ரவரி 14 ஆம் திகதி 01/2004 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை யின் 3(ஆ) பிரிவு | 67,700. 000 | வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அமுல்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட 36 செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது டன், செயற்திட்டங்கள் பொது மக்களின் தேவைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள து. |

## 2. நிதி மீளாய்வு
------------------------

### 2.1 நிதி விளைவுகள்
------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,870,274 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,567,270 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 27,361,000 | 27,306,936 | 20,790,907 | 18,939,397 | 26,363,000 | 31,407,662 | 19,342,277 | 23,048,163 |
| (ii) | வாடகை | 15,530,000 | 14,785,574 | 14,400,994 | 901,612 | 13,665,000 | 11,518,852 | 10,647,589 | 1,152,468 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,001,000 | 1,413,556 | 1,413,556 | - | 2,001,000 | 375,464 | 375,464 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,427,000 | 55,080,434 | 23,649,791 | 50,000,000 | 47,792,000 | 41,090,794 | 41,090,794 | 20,000,000 |
| | | 89,319,000 | 98,586,500 | 60,255,248 | 69,841,009 | 89,821,000 | 84,398,772 | 71,456,124 | 44,200,631 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை ரூபா 738,258 ஆகவும், 05-10 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 1,422,089 ஆகவும், 01-05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 5,233,604 ஆகவும், 01 வருடத்தை விட குறைவான நிலுவை ரூபா 5,994,814 ஆகவும் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வுப் பந்தியை ஏற்றுக்கொள்கின்றோம். |

### 2.2.3 குத்தகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 78,000 தொகையான குத்தகை வாடகை நிலுவையில் ஆண்டின் போது ரூபா 12,200 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை குத்தகை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு பந்திக்காக இணக்கப்பாட்டை தெரிவித்துக் கொள்கின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 29,453,176 தொகையான 32 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு செயல் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| | சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்று விதித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், கழிவுப் பொருள் அகற்றப்படுகின்ற இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்று மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | கழிவுப் பொருள் அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து கோரப்பட்ட போதிலும், அதற்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| (i) | 2019 இன் நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 100,000 மரக் கன்றுகளை நடுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், நடமாடும் வியாபாரிகளுக்காக 20 கை வண்டிகள் வழங்குவதற்காக ரூபா 200,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 10 சதவீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிலைபேறான அபிவிருத்தி சிறுவர் மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| செய்வதன் கீழ் 500 தாய்மார்களும் குழந்தைகளும் நலனாளியாக இனங்காணப்பட்டு பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 2.4 மில்லியன் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் எவ்வளவு என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் செயலாளர் பதவிக்காக முகாமைத்துவ சேவையின் சிரேஷ்ட தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் கணக்காளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | நிரந்தர உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன், வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | வெற்றிடங்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிரதம செயலாளருக்கும் அனுப்பப்பட்ட போதும் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. |
| (ii) | தீயணைப்பு படையில் 05 பதவிகள் மற்றும் மோட்டார் தொழில்நுட்பவியலாளரில் 06 பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும். | தீயணைப்பு படையில் 01 வெற்றிடங்களுக்கும், இயந்திர தீயணைப்பு படையில் 06 வெற்றிடங்களுக்கும் இடையில் 03 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. |
| (iii) | இரண்டு நூலகர் பதவிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) பதவி, முகாமைத்துவ உதவியாளர் பதவி, மூன்று வருமான பரிசோதகர் பதவிகள் மற்றும் சுகாதார கண்காணிப்பாளர் பதவி, சாரதி பதவி, தச்சு வேலை தொழில்நுட்பவியலாளர் பதவி, அலுவலக உதவியாளர் பதவி, காவலர் பதவி, வேலைத் தொழிலாளர் பதவி மற்றும் ஆறு சுகாதார தொழிலாளர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 57 உத்தியோகத்தரிடம் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 654,799 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(இ) ஊழியர் பிணை**

| | | |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டு முதல் சபை ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 65,965 தொகையான பிணை வைப்புக்கள் வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பிணை முதலீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட வீதி அளவுகள் அளவிடை செய்யப்பட்டு மற்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதிகளின் தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான வீதிகளின் அளவை அளவிடுதல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் தொடர்பான தகவல்கள் வைக்கப்பட வேண்டும். | கணக்காய்வை ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | 1999 – 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 9,514,801 செலவில் நிர்மாணிக்கப்பட்ட களுத்துறை நகர சபை பூங்கா விளையாட்டு அரங்கு மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக 2004 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கையில் காலம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டில் 183 நாட்கள் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக | உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் போது உடன்படிக்கையின் சரியான தன்மை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | இணக்கப்பாட்டை தெரிவித்துக் கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| வாடகைக்கு வழங்கும் இயலுமை சபைக்கு காணப்பட்ட போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 2004 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 16 வருட காலம் அந்த விளையாட்டு அரங்கை வாடகைக்கு வழங்குவதால் பெறக்கூடியதாக இருந்த வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வருடம் ஒன்றுக்கு ரூபா 100,000 தொகையொன்று உடன்படிக்கை செய்த தரப்பினரால் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,450,000 தொகை செலவில் மென்பொருள் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஆதன வரி பிரிவைத் தவிர ஏனைய 05 பிரிவுகளில் ஸ்தாபிக்கப்பட்ட அந்த முறைமை 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், செயற்படு நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மென்பொருள் முறைமை சகல பிரிவுகளுக்காகவும் முடியுமான வரையில் விரைவில் செயற்படு நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். | மென்பொருள் முறைமை ஆதன வரி பிரிவில் சகல பிரிவகளுக்கும் சகல முறைமைகளுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அது செயற்படு நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முன் அலவலகம் ஸ்தாபிப்பதற்காக கிடைத்த கணனி துணைப்பாகங்களின் தொகுதி களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டதுடன், முன் அலுவலகம் ஸ்தாபித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் முன் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு கணனிகள் அதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | முன் அலுவலகத்திற்காக வழங்கப்பட்ட 01 கணனி இயந்திரம் தவிர ஏனைய அனைத்தும் ஆண்டின் போது பயன்படுத்துவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையில் இருந்து 2015 ஆம் ஆண்டின் போது | பயனற்று காணப்பட்ட கழிவுப் பாத்திரங்களை | கணக்காய்வை ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட 414 கழிவுப் பொருள் பாத்திரங்கள் 04 வருட காலமாக பயனற்று காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு விநியோகிக்கப்பட வேண்டும். | |

**3.5.2 வாகன பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 03 வாகனங்கள் பதிவு செய்யப்படாமையின் காரணமாக சில வருடங்கள் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் தரித்துவைக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களுக்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவு செய்யப்படாதிருந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக இயந்திர பொறியியலாளரின் உதவியை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரப்பட்ட போதிலும், அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை |
| (ஆ) ஓட்ட நிலையில் காணப்படாத 07 வாகனங்களை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக இயந்திர பொறியியலாளர் உதவியை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட போதும் இது வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொருள் களஞ்சிய வீதியில் பதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட போதுலும், அதனை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இனங்காணப்பட்ட 38 வாடகையாளர்களிடம் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் ரூபா 719,814 தொகை 2019 திசெம்பர் மாதத்தின் போது பெறப்பட்டிருந்தது. | புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் முறையாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரை கடைகள் ஒதுக்கப்பட்டு பண வைப்புக்கள் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கைக்காக பின்னர் முறையான உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுக்குருந்த சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தில் 2018 மே மாதத்தில் ஏற்பட்ட களவினால் சபைக்கு ஏற்பட்ட ரூபா 115,250 தொகையான நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ஆ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2018 திசெம்பர் மாதத்தில் வழங்கப்பட்ட தண்ணீர் தாங்கி கீழே விழுந்தமையினால் ஏற்பட்ட ரூபா 20,320 தொகையான நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 3.8 பெறுகைகள்

#### 3.8.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நேர் ஊழியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 15,192,665 கிரயமான 22 செயற்திட்டங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருட்களுக்காக வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது பெறுகைத் திட்டம் மற்றும் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாத போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கு பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.8.2 ஒப்பந்த நிர்வாகம்**

**தார் இட்டு வீதியினை அபிவிருத்தி செய்தல்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்யப்படாமையினால் ரூபா 584,931 கிரயமான 88.765 கியூப் கருங்கல் எஞ்சியிருந்தது. | செயற்திட்டத்திற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கோரிக்கையின் பிரகாரம் களஞ்சிய பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், விநியோகிக்கப்பட்ட கட்டளை மூலம் பெறப்பட்ட அளவை தவிர்க்கும் போது மிகுதியாக களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பைக் காண்பித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வீதிகளுக்காக இரண்டாம் தடைவ தார் இட்டதன் பின்னர் ஆலோசனையின் பிரகாரம் மணல் இடவேண்டிய போதிலும் 03 செயற்திட்டங்களுக்காக தேவையான அளவை விஞ்சி மேலதிகமாக 6.5 கியூப் மணலிற்காக வழங்குனருக்கு ரூபா 119,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மூலப் பொருட்களை விநியோகிக்கும் போது களஞ்சிய பொறுப்பாளரின் விநியோக கட்டளை மூலம் விநியோகிக்கப்பட வேண்டும். | நேர் ஊழியத்தின் கீழ் மற்றும் நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட கட்டளை மூலம் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளாமல் எடுத்துச் செல்லப்பட்டமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், பின்னர் விநியோகிக்கப்பட்ட கட்டளை களஞ்சிய இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |